செ.வெ.எண்: 60 நாள்: 22.02.2017

**புதுக்கோட்டை மாவட்டத்தில் கல்வி பயிலும் மாணவ,மாணவிகள் அதிக மதிப்பெண்கள் பெற்று புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரியில் மருத்துவ கல்வி பயில வேண்டும் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் அறிவுறுத்தல்.**

---

புதுக்கோட்டையில் உள்ள மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் விலையில்லா மிதிவண்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (22.02.2017) வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி பேசியதாவது:

தமிழகஅரசு பள்ளிக் கல்வித்துறையில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் புதுக்கோட்டை துாய மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 166 மாணவர்களுக்கும், திருஇருதய மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 278 மாணவிகளுக்கும், ஸ்ரீகுலபதி பாலையா மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 46 மாணவர்களுக்கும், சந்தைப்பேட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 88 மாணவிகளுக்கும் என மொத்தம் 578 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி, பாடப்புத்தகம், சீருடை, காலணி, நோட், புத்தகங்கள், அட்லஸ் வரைபடம் உள்ளிட்ட 14 வகையான கல்வி உபகரணங்களை வழங்கி வருகிறது. மேலும், புதுக்கோட்டையில் ரூ.229.46 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு மருத்துவக் கல்லூாி கட்டப்பட்டு வருவதுடன் வரும் கல்வி ஆண்டு முதல் செயல்பட உள்ளது. எனவே நமது மாவட்டத்தை சேர்ந்த மாணவ, மாணவிகள் சிறப்பாக கல்வி கற்று அதிக மதிப்பெண்கள் பெற்று புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லுரியில் மருத்துவ கல்வி பயில வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இ.ஏ.இரத்தினசபாபதி (அறந்தாங்கி), திரு.பி.ஆறுமுகம் (கந்தர்வக்கோட்டை), மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.சாந்தி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் துணைத் தலைவர் திரு.இரா.ராஜசேகரன், மாவட்ட கல்வி அலுவலர் திரு.பரமசிவம், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திரு.வி.சி.ராமையா, முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் திரு.பாஸ்கர், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**